**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 28-04-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-04-28 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-04-29 | 2023-04-30 | 2023-05-01 | 2023-05-02 | 2023-05-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 6.0 | 6.0 | 3.0 | 10.0 | 10.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 35.0 | 34.0 | 34.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 29.0 | 28.0 | 27.0 | 27.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 110 | 160 | 230 | 200 | 160 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பொழிய வாய்ப்பு உள்ளது. வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அதிக பட்ச வெப்பநிலை ஆனது 33-36 செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலை ஆனது 26-29 செல்சியஸ் ஆக பதிவாகலாம். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில் காற்று கிழக்கு மற்றும் தென் திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

கால்நடைகளில் புறஒட்டுண்ணியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் இதனை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி நீக்க மருந்து சைபர்மெத்திரின் 1%கொண்டு தூய்மைப்படுத்தலாம்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| தமிழ்நாட்டில் மே 3 முதல் மே 9 வரை மழை இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாகவும் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பருத்தி | பருத்தியில் தத்துப்பூச்சிகளின் தாக்குதலால் இலைகளிலுள்ள சாறுகள் உறிஞ்சப்பட்டு இலைகளானது சுருண்டுவிடுகின்றன. மேலும் இலைகளின் ஓரங்கள் காய்ந்து தீய்ந்தது போல காணப்படும். பூச்சியின் தாக்குதல் அதிகமாகும் பொழுது இலைகள் காய்ந்து பின்னர் உதிர்த்து விடும். செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மேலும் பூ மற்றும் காய் பிடிப்பது குறைகின்றது. இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். பிப்ரோனில் 5% SC @ 600 ml/ac அல்லது இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 40 ml/ac அல்லது தயமீதாக்சம் 25% WG @ 40 g/ac |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்பநிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிறசாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தற்பொழுது நிலவிவரும் பருவ சூழ்நிலையில் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ பரவலாக தென்படுகிறது. பூச்சிகள் தேன் போன்ற கழிவு பொருளை கீழ்மட்ட அடுக்கில் உள்ள தென்னை ஓலைகளின் மேற்பரப்பில் படிய செய்கின்றன. இதன் மீது கரும் பூஞ்சாணம் படர்வதால் இலைகளானது கருமை நிறமாக காட்சியளிக்கும். இதனை கட்டுப்படுத்த தென்னைமரத்தின் அடியில் தண்ணீரை பீச்சி அடிக்கலாம். ஒரு ஏக்கருக்கு மஞ்சள் ஒட்டும் பொறியினை இரண்டு என்ற எண்ணிக்கையில் வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அளிக்கலாம். பாதிப்பு அதிகமாகும் போது வேப்பெண்ணெய் 5 மி.லி மருந்தினை 1 மி.லி ஒட்டும் திரவத்துடன் சேர்த்து இலைகளின் அடிப்பரப்பில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். 25 கிராம் மைதா மாவினை ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் எடுத்து கொதிக்கவைத்து ஆறியபின் கரும் பூஞ்சாணத்தின் மீது நன்கு படும்படி தெளிக்க வேண்டும். |